செ.வெ.எண்: 46 / ஏப்ரல் /2020 நாள்: 16.04.2020

**திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கொரோனா வைரஸ் நோய் தனிபிரிவில் சிகிச்சை பெற்று வந்த திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை சேர்ந்த 29 நபர்களும், கரூர்-1, பெரம்பலூர் -1, அரியலூர் -1 ஆக மொத்தம் 32 நபர்களுக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சையின் காரணமாக நோய் பாதிக்கப்பட்ட நபர்கள் பூரண குணமடைந்து இன்று மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு, பழங்கள் வழங்கியும், கைதட்டியும், சொந்த ஊருக்கு 108 ஆம்புலன்ஸ் 6 வாகனம் மூலம் வீட்டிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் அனுப்பி வைத்தார்.**

---------------

**இது குறித்து மவாட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை சேர்ந்த 29 நபர்களும், கரூர்-1, பெரம்பலூர் -1, அரியலூர் -1 என மொத்தம் **32** நபர்களுக்கு மருத்துவர்கள், மற்றும் செவிலியர்களின் தீவிர சிகிச்சையினால் பூரண குணமடைந்து இன்று(16.4.2020) வீட்டிற்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர். மருத்துவர்களின் அறிவுரையின் படி வீடுகளில் 14 நாட்கள் தனிமையில் இருக்க வேண்டும். நமது மாவட்டத்தில் 43 நபர்கள் கொரோனா வைரஸ் நோய் பாதிக்கப்பட்டதன் விளைவாக சிகிச்சை பெற்று வந்தனர். இதில் 29 நபர்கள் பூரண குணமடைந்து டிஸ்சார்ஜ் செய்யப்படுகின்றனர். மேலும், இதில் 1 வயது குழந்தை உட்பட 14 நபர்களுக்கு மருத்துவமனையில் தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. இவர்கள் அனைவரும், சிகிச்சை பெற்று நல்ல நிலையில் உள்ளனர்.

டாக்டர்கள் தீவிர சிகிச்சையின் காரணமாக நோய் பாதிக்கப்பட்ட நபர்கள் பூரண குணமடைந்து இன்று மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு சொந்த ஊருக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிறப்பு பிரிவில் பணிபுரிந்த அனைத்து மருத்துவர்கள், செவிலியர்கள், இதர சுகாதராத்துறை பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள் அனைவருக்கும், பாராட்டுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

திருச்சிராப்பள்ளி மாவடத்தில் உள்ள பொது மக்கள் சமூக இடைவெளியை கடைபிடித்து வீட்டிற்கு ஒருவரும், அத்தியாவசிய பொருட்கள் வாங்குவதற்கு வெளியில் வரும்போது மாஸ்க் கட்டாயம் அணிந்து வரவேண்டும்.

தேவையில்லாமல் வெளியில் நடமாடுவதை பொது மக்கள் தவிர்க்க வேண்டும். விழித்திரு, விலகியிரு, வீட்டிலிரு. என்பதை கடைபிடிக்க வேண்டும். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் இல்லாத மாவட்டமாக மாற்றுவதற்கு பொதுமக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மூலம் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொது இடங்களில் கிருமி நாசினி தெளிப்பதற்கு 3 நவீன இயந்திரம் மாநகராட்சி மூலம் வாங்கப்பட்டுள்ளது. 1 இயந்திரத்தின் மதிப்பு ரூ.3.50 இலட்சமாகும். 3 இயந்திரங்கள் 10.50 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்பட்டுள்ளது. இந்த பொது இடங்களில் மக்கள் கூடும் இடங்களான அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, நியாய விலைக்கடைகள், காய்கறி சந்தைகள், ஆகிய இடங்களில் கிருமி நாசினி இயந்திரம் மூலம் தெளிக்கப்படவுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் டாக்டர் வனிதா, மாநகராட்சி ஆணையர் திரு.எஸ்.சிவசுப்ரமணியன், இணை இயக்குநர் மருத்துவப் பணிகள் டாக்டர்.எஸ்.லட்சுமி, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) டாக்டர்.சுப்ரமணி, மருந்து கண்காணிப்பாளர் டாக்டர்.ஏகநாதன், மாநகராட்சி நகர் நல அலுவலர் டாக்டர்.ஜெகநாதன், மற்றும் டாக்டர்கள், செவிலியர்கள், பலர் உடன் உள்ளனர்.

**வெளியீடு**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**